செ.வெ.எண்: 721 நாள்: 07.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி பொருட்கள் விற்பனை மையம் அமைப்பதற்கு நிதியுதவி பெற்றிட விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,தகவல்.**

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், செவித்திறன் பாதிக்கப்பட்டோர் மற்றும் பார்வையற்றோர்கள் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆவின் நிறுவனத்தின் மூலம் ஆவின் முகவர்களாக தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.50,000/- மானியமாக வழங்க உத்தரவிட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார மேம்படுத்தும் பொருட்டு சுயதொழில் செய்திடும் வகையில் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆவின் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய முன் வைப்பு நிதியாக ரூ.25,000/- மற்றும் ஆவின் பொருட்களை கொள்முதல் செய்வதற்கான நிதியாக ரூ.25,000/- என மொத்தம் ஒரு பயனாளிக்கு ரூ.50,000/- மானியம் வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில் ஆவின் உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்து கடை வைத்து வியாபாரம் செய்வதற்கு மாற்றுத்திறனாளிகள் இவ்வலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தில் பயன் பெற பயனாளிகள் ஆவின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்திட வாடகை இடமாகவோ அல்லது சொந்த இடமாகவோ இருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக தொலைபேசி எண் : 04362-236791 தொடர்பு கொள்ளலாம்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச்சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் நகல், குடும்ப அட்டை நகல், மார்பளவு புகைப்படம்-1 வங்கி கணக்கு புத்தக நகல், ஆதார் கார்டு ஆகியவற்றுடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், அறை எண் 114, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம் என்ற முகவரியில் நேரில் 20.11.2020 தேதிக்குள் அஞ்சல் மூலம் அல்லது நேரில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.